# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

**අංක 14,600—1965 දෙසැම්බර් 30 වැනි බ්‍රහස්පතින්දා—1965.12.30**

14,600 ம் இலக்கம்—1965 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 30 ந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I)—பொது

## இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்

எல்/டி/பி/84/50.

### நாணய விதிச் சட்டம்

நாணய விதிச் சட்டம் (அத்தியாயம் 422) பிரிவு 10 (இ) இன் கீழ் ஸ்ரீ லங்கா மகா வங்கியின் நாணயசபை அமைத்த விதிகள்.

கொழும்பு,
1965, மார்கழி 28.

ஆளுனர்,
ஸ்ரீ லங்கா மகா வங்கி.

### விதி

ஸ்ரீ லங்கா மகா வங்கியின் நாணயச்சபை அமைத்ததும், 1950 ம் ஆண்டு ஆவணி 28 ம் தேதி விசேட வர்த்தமானி எண் 10,143 இல் பிரசுரிக்கப்பட்டதும் இறுதியில் 1954 ம் ஆண்டு சித்திரை 30 ம் தேதி வர்த்தமானி எண் 10,666 இல் பிரசுரிக்கப்பட்ட விதியால் திருத்தியமைக்கப்பட்டதுமான. விதி ' அ ', 1964 ம் ஆண்டு தை 1 ம் தேதி முதல் இத்தால் மேலும் திருத்தி அமைக்கப்பெற்று பின்வருமாறு அமையும் :

(1) அவ்விதியின் (1) ம் பந்தியில்—

(அ) அப்பந்தியின் (அ) துணைப்பந்தியில் " சனி அல்லது ஞாயிறு அல்லது வங்கி விடுமுறை அல்லாத " என்ற சொற்தொடருக்குப் பதில் " வங்கி விடுமுறையினால் அல்லது போயா தினம் அல்லது போயா தினத்திற்கு உடனடியாக முன்வரும் நாள் அல்லாத " என்ற சொற்தொடரைக் கையாளவும், அத்துடன்

(ஆ) அப்பந்தியின் (ஆ) துணைப்பந்தியில் " அதாவது சனிக்கிழமை " என்ற சொற்தொடருக்குப்பதில் " அதாவது போயா தினத்திற்கு உடனடியாக முன்வரும் நாள் " என்ற சொற்தொடரைக் கையாளவும், அத்துடன்

(2) விதியின் பந்தி 2 இல் " வங்கி விடுமுறை தினம் " என்ற வரையிலக்கணத்திற்குப் பின் உடன் தொடர்ந்து பின்வரும் புதிய வரையிலக்கணத்தைப் புகுத்தல்.

" போயா தினம் " என்பது 1965 ம் ஆண்டின் எண் 17 விடுமுறைச் சட்டத்திலுள்ளது போன்று அதே பொருளுடையது.

12–1664

இலங்கை, வாழைச்சேனை சஸரேண பேப்பர் மில்ஸ் கோப்பரேசனால் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.